International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# பூ நெஞ்சத் தீ சிறுகதையில் சமூகமும் வாழ்வியலும்

**சு. சசிக்குமார்**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்

**முனைவர் மு. சுதா**
பேராசிரியர், நெறியாளர் தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-03

**ஆய்வுச்சுருக்கம்**

மேலாண்மை பொன்னுச்சாமி பூ நெஞ்சத் தீ சிறுகதையில் சமூகத்தில் கணவனை இழந்த பெண்ணின் வறுமை நிலையைப் பயன்படுத்தி அவளை இறையாக்க நினைக்கும் சமூகத்திற்கு முன்னாள் வைராக்கியத்துடன் வாழ்ந்து காட்டும் மன வலிமையுடைய பெண்ணின் வாழ்வியலை விளக்குகிறது. கரிசல் வட்டார வேளாண் மக்களின் தொழில்களை விளக்குகிறது. சாமானிய மக்களிடத்தில் ஹோமியோபதி மருத்துவம் செல்வாக்கு பெற்றிருந்தது. இச்சமூகத்தில் கடவுள் நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர் என்பதனை இவ்வாய்வில் ஆராயுமாறு இக்கட்டுரை அமையப் பெற்றுள்ளது

**முன்னுரை**

கரிசல் வட்டார எழுத்தாளர்களில் ஒருவர் மேலாண்மை பொன்னுச்சாமி கரிசல் நிலப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளை சிறுகதையாக படைத்துள்ளார். மின்சாரப் பூ சிறுகதைத் தொகுப்பில் காணலாகும் “பூ நெஞ்சத் தீ” எனும் சிறுகதையில் கணவனை இழந்த பெண்ணிற்கு இச்சமூகத்தில் ஏற்படும் பிரச்சனைகளையும் அவற்றிலிருந்து போராடி வைராக்கியத்துடன் வாழ்வில் வெற்றி பெறும் நிலையினையும், கரிசல் வட்டார மக்களின் தொழில், மருத்துவம், கடவுள் நம்பிக்கை போன்ற வாழ்வியல் பதிவுகளை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**ஆசிரியர் அறிமுகம்**

மேலாண்மை பொன்னுச்சாமி விருதுநகர் மாவட்டம் மேலாண்மறைநாடு என்ற கிராமத்தில் பிறந்தார். குடும்ப வறுமையின் காரணமாக ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிக்க முடியவில்லை என்றாலும் அவர் நூல்களை வாசிப்பதை நிறுத்தவில்லை. இடதுசாரி இலக்கிய அமைப்புகளுடன் தொடர்பால் எழுதத் தொடங்கினார். சிறுகதை தொகுப்புகள் 22, நாவல்கள் 6, குறுநாவல்கள் 6, கட்டுரைத் தொகுப்பு 1 எழுதியுள்ளார். “மின்சாரப் பூ” சிறுகதை தொகுப்பிற்கு 2008 ல் சாகித்ய அகாதமி விருது கிடைத்தது. “மனப்பூ” சிறுகதைத் தொகுப்பிற்கு இலக்கிய விருது பெற்றார். இவரது படைப்புகளை பள்ளி மற்றும் பல்கலைக்கழகங்களில் பாட நூலாக இடம் பெற்றுள்ளது.

**கதைக்கரு**

ஒரு பெண்ணின் வாழ்வியல் போராட்டத்தையும் வைராக்கியத்தையும் எடுத்துரைக்கும் கதையாகும்.

**கதைச்சுருக்கம்**

வயதிற்கேற்ற ஆசைகள் கொண்ட இளம்பெண் விஜயம் தன் குழந்தை சரசுவுடன் தனித்துக் கூலி வேலை செய்து வாழ்க்கையை நடத்திக் கொள்கிறாள். ஒரு நாள் குழந்தை சரசுக்கு மூளையில் ஏற்பட்ட கட்டி காரணமாக உடல்நிலை சரியில்லாமல் போக மருத்துவம் பார்க்க பணமின்றித் தவித்துப் போகிறாள். பணம் கிடைக்காமல் போக தெய்வத்தை நம்பி நிற்கவும் ஹோமியோபதி

மருத்துவம் தேடிச் செல்லவும் வழிப்படுத்தபடுகிறாள். அவளின் இந்த அவலச் சூழலைப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் ராசலிங்கம் என்பவனைத் துறத்தியடிக்கிறாள். மன உறுதியோடு தன்மகளையும் தன்னையும் காத்துக் கொண்டு சமூகத்தோடு போராடி வாழ்ந்து காட்டுகிறாள். ஒரு பெண்ணின் மன உறுதியினை வெளிப்படுத்தும் நிலையில் கதை அமைந்துள்ளது.

**கதைப்பின்னல் - தொடக்கம்**

விஜயம் துணையின்றித் தனித்து வாழ்பவள் அவளுக்குள் ஆசைகளும், தேடல்களும் பல்வேறு உணர் ஓட்டங்களையும் இருப்பதை சுட்டுவதோடு கதை தொடங்குகிறது.

**வளர்ச்சி**

ஏழ்மைச் சூழலில் ஏராளமான கனவுகள் இருந்தாலும் அவை நிறைவேற இயலாத சூழலில் தன் மகளோடு வாழ்ந்து கொண்டிருக்கும் விஜயம் மகளின் உடல்நிலைக் குறைவு ஏற்பட்ட நிலையில் கதை வளர்ச்சியடைகிறது.

**உச்சம்**

மகள் மூளையில் கட்டியோடு உடல்நிலை சரியில்லாமல் இருக்க தேவைப்படும் மருத்துவச் செலவுக்கு விஜயம் என்ன செய்வது என்று தெரியாமல் நிற்கும் அவலநிலையில் கதை உச்சம் அடைகிறது.

**வீழ்ச்சி**

மருத்துவத்திற்கான வழிகாட்டுதல்கள் பல ஆறுதல்கள் என்பதோடு இதனையே சரியான சூழலாகக் கருதி விஜயத்தை நாசம் செய்ய நினைக்கும் ராசலிங்கத்தின் சூழ்ச்சி மூலம் கதை வீழ்ச்சிநிலை நோக்கி செல்கிறது.

**முடிவு**

‘வறுமையில் சிக்கித் தவித்தாலும் கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே’ என்பது போல தன்நிலை தாளாமல் ராசலிங்கத்தை விரட்டியடித்து தன்மகளையும் காத்து விஜயம் வாழ்ந்து காட்டுவதாகவும் அவளை ‘வைராக்கிய மனுஷி’ என்று ஊரே புகழ்வதாகவும் கதை முடிவடைகிறது.

**சமூகம்**

சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட மக்களின் குழுவைக் குறிக்கும். ஒரே மாதிரியான புவியியல் நிலப்பகுதியில் வாழ்கின்ற ஒரு பெரிய மக்கள் குழுவையும், ஒரே மாதிரியான அரசியல் அதிகாரத்திற்கு உட்பட்ட சமூகம் எனக் கருதலாம். ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே சமூகம் என்பதாகும். (கதைக் களஞ்சியம் - ப.471)

**வறுமை**

வறுமை ஒரு முதன்மையான சமூகப் பிரச்சனை தனி மனிதனையும் நிலைகுலையச் செய்யும் தன்மை கொண்டது. “போதுமான வருமானம் இல்லாத காரணத்தால் ஒருவன் உடல் அளவிலும் மனநிலை அளவிலும் தகைதிறன் பெறுகிற அளவுக்கு உயர்ந்து வாழ்க்கைத் தரம் பெறாமல் போவதும் அவளது சமூகத்தில் நிலவும் தரங்களுக்கேற்ப அவனும் அவனைச் சார்ந்து வாழ்பவர்களும் முழு இயக்கத்திறனுடன் செயல்பட முடியாமல் போவதுமான நிலை வறுமை ஆகும்”. (சமூகப் பிரச்சனைகள் -ப.56)

மனதிற்குள் வயதுக்கேற்ப விருப்பங்கள் நிரம்பப் பெற்றவள் ஆனால் அதற்கேற்ப வாழ்க்கை அமையாமல் தனி ஒருத்தியாக நின்று தனது பெண்பிள்ளையை வளர்க்கும் கடமை கொண்ட பெண் விஜயம்.

“கேட்பாரற்றுப்போன வனத்தில் செம்போத்துப் பறவையின் ஏக்கக் கூவலாக... நாதியற்றுப்போன அவளது அழுகையும் சோகமும்” (பூ நெஞ்சத் தீ -ப.2) என விஜயத்தின் சூழலை ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார். வறுமையின் உச்சத்தில் கூலி வேலைக்கு செல்கின்றாள்.

“டயர் மிதியடியில் காலைச் சொருகினாள் தூக்குச்சட்டி சோறும் களை சுரண்டியுமாகத் தெருவில் இறங்கினாள் விஜயம்” (பூ நெஞ்சத் தீ -ப.3) அவளின் வறுமையை சுட்டி நிற்கிறது.

கணவனை இழந்த பெண் வறுமையில் முறையற்ற மிதியடியுடன் கூலி வேலைக்கு சென்று பிழைப்பு நடத்தும் பெண்ணின் வறுமையை விளக்கப்படுகிறது.

வறுமையான சூழ்நிலையில் அவளது மகள் சரசுவிற்கு உடல்நிலை பாதிக்க அக்குழந்தையைக் காப்பாற்ற வழியின்றித் தவிக்கிறாள் அவளுடைய வறுமையும் குடும்பச்சூழலும் அவளுடைய வயதிற்கு விலை வைக்கின்றனர். அவள் மீது ஆசை கொண்ட ராசலிங்கம் குழந்தையைக் காப்பாற்ற அவளை இறையாக்க நினைக்கின்றான் ஆனால் விஜயம் “ச்சீ! தெரியாம செய்ற அசிங்கம் அசிங்க மில்லையா? ஒழுக்கம்கிறது ஊருக்குப் பயந்து காப்பாத்துறதுல்லே உள்ளேயிருந்து கொழுந்து விட்டெரியுற பண்பு தீ! ச்சேய் நாயே அதெல்லாம் ஒனக்கு என்ன தெரியப்போகுது? போயிரு வெளியே விளக்கமாத்தை எடுக்குறதுக்குள்ளே” என்று எதிர்த்து நிற்கிறாள். (பூ நெஞ்சத் தீ – ப.8)

வறுமையின் அவலத்திற்கு உள்ளாகும் பெண்களின் நிலை இச்சமூகத்தில் எப்படி இருக்கிறது என்பதை விஜயம் வழி ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார்.

“நாதியத்து வழியில்லாமல் நிற்பதால் தானே தெரு நாய் கூட வருகிறது”(பூ நெஞ்சத் தீ-ப.8) என்று வறுமையின் அவலம் சுட்டப்படுகிறது.

தனித்து நிற்கும் ஏழ்மைமிக்க பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளையும் அதனை எதிர்த்துப் போராடி வாழும் பெண்ணின் வைராக்கியத்தையும் இவர்கள் வாழும் சமூகத்தை இக்கதை எடுத்துக்காட்டுகிறது.

"சீமான்களுக்கு வரவேண்டிய சீக்கு சீப்பட்ட ஏழைக்கு வந்திருக்கு நீ என்ன செய்வே"(பூ நெஞ்சத் தீ-ப.6) என்று கூறுவதன் மூலம் மருத்துவம் என்பது எல்லோருக்கும் எளிதாக கிடைக்காதச் சமூகத்தை இக்கதையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. வாழ்க்கையில் எத்தனை போராட்டங்கள் வந்தாலும் பெண்கள் மன உறுதியுடன் வாழ்ந்து காட்டுபவர்கள் என்பதனை "சரசு பெற்ற ஆம்பிள்ளைப் பிள்ளையை நரைத்த தலையோடு கொஞ்சிக் கொண்டிருந்த விஜயத்தை ஊரை கையெடுத்துக் கும்பிட்டது… வைராக்கிய மனுசி என்று"(பூ நெஞ்சத் தீ-ப.9) என்ற அடிகள் சுட்டுகிறது. விஜயம் என்பவள் கணவனை இழந்த பிறகு வாழ்நாள் முழுவதுமே தனது குழந்தைக்காகவே வைராக்கியத்துடன் வாழ்ந்து காட்டிய பெண் என்று சமூகத்தில் பேசும் நிலையினை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

**மனிதநேயமும், மனிதநேயமற்ற சமூகமும்**

மனிதநேயம் என்பது மனிதனை மனிதன் அன்பு செய்வதாகும். ஒரு மனிதனை மனிதனாக வாழச் செய்வதற்கான அடிப்படை ஆதாரமாகத் திகழ்வது அன்பு அந்த அன்பு எவ்வித தடையுமின்றி அனைவரிடமும் காட்டப்படுவதே மிகச்சிறந்த மனிதநேயமாகும். "அனைத்து உயிர்களிடத்தும் அன்பு, இறக்கம், கருணை கொண்டு சுயநலமற்ற பொதுநலச் சிந்தனைகயோடு பிறர் நலங்காக்கும் பேருள்ளச் சிந்தனையை மனிதநேயம்" (மனிதநேய சிற்பி-ப.20) மனிதநேயம் இன்றும் சமூகத்தில் மறைக்கப்படவில்லை என்பதற்கு கதையில் வரும் கிராம மக்கள் முன் உதாரணமாக நிகழ்கின்றனர். "பள்ளியிலிருந்து வீடு வீடு கொண்டுவரப்பட்டிருந்தாள் சரசு கூடியிருந்த தெருக்காரர்கள் பரப்பரப்பும் பதற்றமுமாக தெரிந்த கை வைத்தியம் செய்து கொண்டிருந்தனர். சுடவைத்த வேப்பெண்ணெய் கொடுத்து… மூத்திர நீரில் கரைத்த அரைப்பு மூக்கில் பிழிந்து, அமிர்தாஞ்சணம் தடவி…. நெல் உமி ஒத்தடம் தந்து கிராமத்து மண்ணில் ஆணிவேர் பதிந்திருந்த மனிதநேய உயிர்பயிர்" (பூ நெஞ்சத் தீ-பக்.3இ4) என்ற நிலையில் இன்றும் சில நல்ல மனிதர்கள் இருப்பதனை இக்கதையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பெண்ணின் வறுமையை பயன்படுத்தி விஜயத்தை இறையாக்க நினைக்கும் சமூகத்தை ஆசிரியர் விளக்குகிறார். "புள்ளையை நெனச்சுப்பாரு…யாருக்கும் தெரியாமல் நாம பழகிக்கலாம்" (பூ நெஞ்சத் தீ-ப.8) என்று கூறும் நிலையில் மனிதநேயமற்ற சமூகத்தில் பெண்கள் தவறான பாதைக்கு அழைக்கும் நிலையினை சுட்டுகிறது. பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மையுடைய மக்கள் வாழும் சமூகத்தில் ராசலிங்கம் போல் ஒரு சில மனிதநேயமற்ற மனிதர்களும் உலகில் வாழ்கின்றனர் என்பதனை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

**வாழ்வியல்**

மக்களின் வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையப் பெறுவதே வாழ்வியல் எனலாம். உணவு, உடை, திருமணம், கலைகள், வழிபாடு, நம்பிக்கைகள், சடங்குகள் போன்ற அன்றாட நிகழக் கூடிய அனைத்து நிகழ்வுகளும் வாழ்வியல் ஆகும்.

**பெண்ணின் வைராக்கியம்**

துணையின்றித் தனித்து நிற்கும் ஒரு பெண்ணின் சமூகச்சூழல் எப்படி உள்ளது என்பதை இக்கதை விளக்குகிறது. "நீ தொணையில்லாத பொண்ணு ஏற்கெனவே குடும்பக்கட்டுபாடு செஞ்சுக்கிட்டிருக்கே… கையும் கையும் பொத்துனாப்புலே நாம கமுக்கமா இருந்துக்கலாம் எந்த பயமும் இல்லை நாம அப்பப்ப பாத்துக்கிடலாம்" (பூ நெஞ்சத் தீ-ப.8) ஓநாய்த்தலையில் குருரக் கண்களின் பார்வை கணவனை இழந்த பெண்ணை ஒருவன் ஊருக்கு தெரியாமல் பழகிக் கொள்ளலாம் என்று அழைக்கும் நிலையில் கருக்கு நடுவில் பெண்கள் வாழும் வைராக்கிய வாழ்வு இக்கதையில் பதிவு செய்யப்பட்டுள்ளது "போயிரு வெளியே விளக்குமாத்தை எடுக்குறதுக்குள்ளே" (பூ நெஞ்சத் தீ-ப.8) என்ற குரல் ஒரு பெண்ணின் மன உறுதியை சுட்டினாலும் தனித்து வாழும் பெண்ணிற்கு ஏற்படும் இன்னல்களை பதிவு செய்யப் பட்டுள்ளது.

**தொழில்**

விவசாயம் என்பது ஒரு நாட்டின் முதுகெழும்பு ஆகும். ஒவ்வொரு பருவகாலத்திற்கேற்ப பயிரிட்டு வேளாண்மை செய்கின்றனர். நிலத்தை உழுது பண்படுத்துதல், விதைத்தல், நாற்று நடுதல், களையெடுத்தல், அறுவடை செய்தல் போன்ற உழவுப் பற்றிய செய்திகளை கவிதைகளில் வெளிப்படுத்துகின்றன.

**"உழுத வயலின் காட்சியை நல்வேட்டனார்**
**அரிகால் மாரிய அருகண் அகண்வயல்**
**மறுகால உழுத ஏரச் செறுவயின்**
**மீனோடு பெயரும்"**

(தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சூழல்கள்-ப.240) வேளாண்மை தொழில்கள் பற்றி இக்கதையில் எடுத்துக்காட்டுகிறது.

"சதுர சதுரமான பாத்திக்கட்டுகள் மினிமினிப் பான கரிசல் மண் மக்காச் சோளப்பயிர் கோழிக்குஞ்சுகளைப் போல லட்சணமாக சிறுசாக இருந்தன களைவெட்டுக்கு நிலம் பருவமாக இருந்தது" (பூ நெஞ்சத் தீ-ப.3)

கரிசல் மண் பகுதி குறித்தும் அடர்ந்த பயிர்தொழிலும் அதில் ஆண், பெண் இருபாலரும் உழவினை மேற்கொண்டமையும் அறியப்படுகிறது. கரிசல் மண்ணில் விளையக் கூடிய மக்காச்சோளம் வயல்கள் முழுவதும் பயிர்கள் இருப்பதை காட்சிப்படுத்தப் படுகிறது. வறண்ட நிலப்பகுதியில் விளையும் மக்காச் சோளம் பற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மருத்துவம்**

மருத்துவம் என்பது நோய்களைக் குணப்படுத்துவதற்கான கலையும், அறிவியலும் ஆகும். இதனை நோய்களைக் கண்டுபிடிக்கவும் அவற்றை குணப்படுத்தவும் அவை வராமல் தடுக்கவும் உதவும் அறிவியல் எனலாம்.

மருத்துவத்தின் இன்றைய நிலையினை இக்கதை விளக்குகிறது. "சீமான்களுக்கு வரவேண்டிய சீக்கு சீப்பட்ட ஏழைகளுக்கு வந்திருக்கு" என மருத்துவ வசதி வறுமையுற்றவர்களுக்கு அருதாகிப் போனதை இக்கதை எடுத்துக் காட்டுகிறது.

"ரொம்பச் செலவாகுமா? ஆமாம்மா... எப்படியும் நாலாயிரம் ரூவாயாகும் எக்ஸ்ரே எடுக்கனும்னா.... மதுரைக்கு போகனும்" (பூ நெஞ்சத் தீ-ப.5) என்பதன் வழி மருத்துவச் செலவின் வீக்கத்தையும், மருத்துவத்திற்காக ஊர் ஊராய்ச் செல்ல வேண்டிய நிலையினை இக்கதை எடுத்துக்காட்டுகிறது. மேலும் ஹோமியோபதி மருத்துவம் குறித்தும் இக்கதை விளக்குகிறது.

"கோயில்பட்டியிலே ஒரு ஹோமியோபதி டாக்டரு இருக்காராம் கொறைஞ்ச செலவுல நல்ல வைத்தியம் பண்றாராம்" (பூ நெஞ்சத் தீ-ப.6) என மீனாட்சி அறிவுரைப்படி ஹோமியோபதி மருத்துவமனையில் கொடுத்த மாத்திரைகளை மட்டுமே தவறாமல் சரசுவிற்கு கொடுத்தாள். ஹோமியோபதி மருத்துவத்தை மக்களால் ஏற்றுப் போற்றப்பட்டதை இக்கதையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நாட்டுப்புற கை வைத்திய முறையினை இக்கதையில் கூறப்பட்டுள்ளது.

"சுட வைத்த வேப்பெண்ணெய் கொடுத்து மூத்திர நீரில் கரைத்த அரைப்பு மூக்கில் பிழிந்து அமிந்தாஞ்சணம் தடவி... நெல் உமி ஒத்தடம் தந்தனர்"(பூ நெஞ்சத் தீ-ப.3இ4) சரசுவிற்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டபோது கிராம மக்கள் தெறிந்த கை வைத்தியம் செய்து உயிரை காப்பாற்றினார்கள். நாட்டு மருத்துவ முறையினை இக்கதையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வழிபாடும், நம்பிக்கையும்**

ஹோமியோபதி மருத்துவ முறையில் நம்பிக்கை கொண்ட மக்கள் தங்களைக் காப்பாற்ற இறைவனே வழி என்று நம்பி வழிபாடு செய்யும் மக்களின் கடவுள் நம்பிக்கையினை இக்கதை எடுத்துக்காட்டுகிறது. "அடியே...ரூவா இல்லாமல் போனாலும் நமக்குன்னு ஒரு ரூட்டு இல்லாமப் போகாதுடி... சாமிக்கும் பாருன்று பெரியாளுக சொல்லுவாக ஓங் குல தெய்வம் அருஞ்சுனை காத்த அய்யாருக்கு ஒரு நேர்த்திக்கடன் போட்டுரு சாமி விட்டபடி நடக்கட்டுன்னு நம்பிக்கையோட இரும்மா நம்பிக்கை வந்துட்டா மல்லுக்கட்டுற மன தைரியம் வந்துரும்"(பூ நெஞ்சத் தீ-ப.6) வறுமையின் அடுத்தநிலை வழிபாடும் நம்பிக்கையும் கொண்ட மக்களின் வாழ்வினைச் சுட்டி நிற்கிறது.

**முடிவுரை**

பூ நெஞ்சத் தீ சிறுகதையில் சமூகத்தில் கணவனை இழந்த பெண்ணின் வறுமை நிலையை பயன்படுத்தி அவளை இறையாக்க நினைக்கும் சமூகத்திற்கு முன்னால் வைராக்கியத்துடன் வாழ்ந்துகாட்டும் பெண்ணின் வாழ்வியலை விளக்குகிறது. கரிசல் வட்டார வேளாண் மக்களின் தொழில்களை அறிய முடிகிறது. மக்களிடத்தில் ஹோமியோபதி மருத்துவம் செல்வாக்கு பெற்றிருந்தது. இச்சமூகத் தில் கடவுள் நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர் என்பதனை இவ்வாய்வில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**துணை நின்றவை**

1. கண்ணன்.நா, சமூகப் பிரச்சனைகள் மீரா ஆப்செட் பிரிண்டர்ஸ்,104/184 வெங்கடச்சலம் தெரு சென்னை-5,முதற்பதிப்பு-2011
2. சித்ரா.மு.சி, மனிதநேயச் சிற்பி கண்ணன் பதிப்பகம் திருச்சி,முதல் பதிப்பு-2005
3. சோம சுந்தரனார்.பெ.வோ(உ.ஆ), பத்துப் பாட்டு பகுதி இரண்டு தென்னிந்திய சைவ சித்தாந்த நூல் பதிப்பகம், 5/22டி.டி.கே சாலை, ஆழ்வார்பேட்டை சென்னை-18, முதற்பதிப்பு-1995
4. தூரன்.பெ (தெ.ஆ) - கலைக் களஞ்சியம் தொகுதி-4,தமிழ் வளர்ச்சி கழகம் வெளியீடு, சென்னை-1956
5. முனைவர் பரிமளா.தி, தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் ஆய்வுக்கட்டுரை தொகுதி மக்கள் பதிப்பகம்,283-1 ஈஸ்வரன் தெரு, பாலவன் நகர், அனுப்பானாடி மெயின்ரோடு, மதுரை-9
6. மேலாண்மை பொன்னுச்சாமி, மின்சாரப் பூ சீதைப் பதிப்பகம், 6ஏ/4 பார்த்தசாரதிசாமி தெரு,திருவல்லிக்கேணி, சென்னை-5, இரண்டாம் பதிப்பு-2023